NEW SYLLABUS

அலகுப் பரீட்சை வினாத்தாள்

UNIT EXAMINATION PAPER

UNIT 8

EXAMINATION MODEL EXAMINATION MODEL EXAMINATION MODEL EXAMINATION MODEL EXAMINATION MODEL EXAMINATION MODEL EXAMINATION MODEL

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தர) ப் பரீட்சை
අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය
**General Certificate of Education (Adv. Level) Examination**

| | |
|---|---|
| அரசியல் விஞ்ஞானம் | I&II |
| දේශපාලන විද්‍යාව | I&II |
| Political Science | I&II |

| 23 | T | I&II |
|---|---|---|

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three Hour

P.T.M. AMEEN BA( Pera), PGDE ( Merit ), SLTS Contact No: 0772273916

**அறிவுறுத்தல்கள் :**

- இவ்வினாத்தாள் A, B ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும்.
- எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி A - 5 கூற்றுக்களை உளள்டக்கிய 15 பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாகும்.
- ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 15 வினாகக்ளுக்கும் 30 புள்ளிகள் வழங்கப்படும்.
- பகுதி B - குறு விடைகளை வழங்க் வேண்டிய 10 வினாக்களைக் கொண்டதாகும்.
- ஒரு வினாவுகக் 02 புள்ளிகள் வீதம் 10 வினாக்களுக்கு 20 புள்ளிகள் வழஙகப்படும்.
- பகுதி I க்கான மொத்தப் புள்ளி 50 ஆகும்.
- பகுதி II க்கான மொத்தப்புள்ளி 50 ஆகும்

**பகுதி A**

- **1 தொடக்கம் 10 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

01. சோல்பரி அரசியல் அமைப்பு கொண்டுள்ள வெஸ்மின்ஸ்டர் பண்புகளில் ஒன்று
 1. அரசியல் கட்டமைப்பினுள் முக்கிய இடத்தை மகாதேசாதிபதிக்கு வழங்குதல்.
 2. பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறும் அமைச்சரவை ஒன்று காணப்படல்.
 3. சுயாதீன நீதித்துறை ஒன்று காணப்படுதல்.
 4. சோல்பரி எழுதப்படாத அரசியலமைப்பு ஒன்றாகக் காணப்பட்டமை
 5. சுயாதீன அரசாங்க சேவை ஆணைக்குழு ஒன்று காணப்படல். (……)

02. பிரித்தானிய அரசியலமைப்பிலிருந்து சோல்பரி அரசியலமைப்பு வேறுபட்டிருந்த அம்சங்களில் ஒன்று.
 1. பாராளுமன்றம் சட்டரீதியாக உயர்நிலையினைக் கொண்டதாக இருத்தல்
 2. அரசாங்கம் பாராளுமன்றத்தால் நிர்வகிக்கப்படல்.
 3. அரசியலமைப்பு விவரண அதிகாரம் வரையறுக்கப்பட்ட மற்றும் எழுதப்படாத வகையில் நீதிமன்றுக்கு உரித்தாக்கப்பட்டிருந்தமை.
 4. அரசாங்கம் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறல்
 5. எளிய பெரும்பான்மை தொகுதி முறையினை அடிப்படையாகக் கொண்ட இருகட்சி முறை.

(……)

P.T.M. Ameen

03. சோல்பரி அரசியலமைப்பிற்கு பதிலாக புதியதொரு அரசியலமைப்பை உருவாக்குவதற்கு பின்னணியாக அமைந்த காரணிகளில் ஒன்று.

1. சோல்பரி அரசியலமைப்பின் கீழ் தொடர்ந்தும் பிரித்தானிய முடிக்குரிய அரசாக இலங்கை காணப்பட வேண்டும் என்ற வாதம் கட்டியெழுப்பப்பட்டமை.
2. அரசசேவை ஆணைக்குழுக்கள் ஒழுங்காக காணப்பட்டமை
3. இலங்கையை குடியரசாக மாற்ற வேண்டிய தேவை.
4. நீதிச் சேவை ஆணைக்குழு சிறப்பாக இயங்கியமை
5. 1931 டொனமூர் அரசியலமைப்பு எல்லா மக்களையும் திருப்தி படுத்தியமை (……)

04. 1972 அரசியல் யாப்பின் கீழ் அமைந்த உணம்ம நிர்வாகம் தொடர்பாக பிழையான கூற்று

1. அமைச்சரவை என அழைக்கப்பட்டது.
2. பிரதமரையும ஏனைய அமைச்சர்களையும் கொண்டிருந்தது.
3. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.
4. ஜனாபதிபதிக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டிருநத்து.
5. சட்டமனறினால நிறைவேற்றப்படும் நம்பிக்கையில்லாப் பிரரேணையின் மூலம் அகற்றப்பட முடிநத்து

05. சோல்பரி அரசியல் அமைப்புக்கு பொருத்தில்லாத கூற்று பின்வருவனவற்றுள் எது?

1. பாராளுமனற் அரசாங்க முறையை அறிமுகம் செய்தது
2. 29 ஆம் சரத்தின் கீழ் சிறுபான்மையனருக்கு விசேட பாதுகாப்புக்களை வழங்கியது.
3. இருமன்ற சட்டத்துறை தாபித்தது.
4. இலங்கைக்கு பூரண சுதந்திரத்தை வழங்கியது.
5. இலங்கையை குடியரசாக பிரகடனப்படுத்தியது. (……)

06. 1972 அரசியல் யாப்பின் முக்கிய பண்புகளாவன.

A. ஐக்கிய இராச்சியத்துடனான சகல யாப்புசார் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன.
B. தேசிய அரசுப்பேரவை அரசின் மீயுயர் தாபனமாக ஆக்கப்பட்டமை.
C. அதிகாரக் குவிப்புக்குப் பதிலாக வலுவேறக்கம் சேரக்கப்பட்டமை
D. பிரதம மந்திரி எதேச்சதிகார முறையை தாபிக்கப்பட்டமை.
E. அரசியலமைப்பு நீதிமன்றம் யாப்பு ரீதியான சட்டங்களுக்கு விளக்கம் வழங்கியது.

1. ABC E 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABDE

07. 1948 சோல்பரி அரசியல் யாப்பு

A. பிரித்தானிய ஆட்சியாளரக்ள் சுதந்திரத்தோடு வழங்கிய சுதந்திர இலங்கையின் முதலாவது யாப்பாகும்.
B. சமமான அதிகாரங்களைக் கொண்ட இரு மனற் சட்டமன்றைக் கொண்டதாகும்.
C. 1944 அமைச்சரவை நகல் திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது.
D. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதில் விசேட கவனம் செலுத்தியது.
E. 1972 முதலாம் குடியரசு யாப்போடு இல்லாதொழிக்கப்பட்டது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

P.T.M. Ameen

08. 1972 முதலாம் அரசியல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அரசுப்பேரவை

A. தனிமன்ற சட்டத்துறையாகும்

B. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருந்தது.

C. பாராளுமன்ற இறைமைக் கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது.

D. அதிகாரங்களிலும் அந்தஸ்த்திலும் சோல்பரி யாப்பின் பாராளுமனறினை அதிகம் ஒத்ததாக இருநத்து.

E. யாப்பின் மூலம் வழங்கப்பட்ட ஆறுவருட பதவிக்காலத்தை அனுபவிக்கும் உரிமையை பெற்றிருந்தது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

09. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சோல்பரி யாப்பில் வழங்கப்பட்டிருந்த விசேட காப்பீடுகள் ஆவன.

A. அடிப்படை உரிமைகள் பற்றிய ஓர் அத்தியாயம்.

B. யாப்பின் 29(2) ஆம் உறுப்புரை

C. செனற் மன்றம்

D. பல உறுப்பினர் தேர்தல் தொகுதிகளும் மகாதேசாதிபதியால் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு நியமிக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களும்.

E. சுதந்திரமான நீதித்துறையும் பகிரங்கசேவையும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

10. 1972 முதலாம் குடியரசு யாப்பு தொடர்பான பிழையான கூற்றுக்களின் தொகுதி

A. அரசாங்கத்தில் பிரித்தானிய இராணியாரின் தலைமைத்துவத்தைத் தொடர்ந்தும் பேணியது.

B. இலங்கைக்கு ஒரு சமஷ்டி அரசாங்க முறையை அறிமுகம் செய்தது.

C. இலங்கையைச் சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஒரு குடியரசாகப பிரகடனப்படுத்தியது.

D. இலங்கையயை சமயச்சார்பற்ற அரசாகப் பெயர் சூட்டியது

E. இலங்கைக்கு ஒரு புதிய தேசிய கீதத்தை அறிமுகப்படுத்தியது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

P.T.M. Ameen

**11 தொடக்கம் 15வரையிலான ஒவவொரு வினா தொடர்பாகவும் இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக் கூற்றுக்குப் பின்வரும் அட்டவணை 1 இற்கான வழிகாட்டியிலுள்ள 1, 2, 3, 4, 5 என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருந்துகிறது என்பதைத் தெரிவுசெய்து அதனிலக்கத்தை அடைப்புக்குறிக்கு உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**அடட்வணை 1 இறக்ான வழிகாடடி**

| இலக்கம் | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | பொய் |
| 5 | உண்மை | உண்மையாக இருப்பதோடு முதல் கூற்றை மேலும் விபரிக்கிறது. |

**அட்டவணை1**

| கூற்று I | கூற்று II |
|---|---|
| 11.சோல்பரி யாப்பின் கீழ் உயர்நீதிமன்றம் இறுதி மேன்முறையீட்டு நீதி மன்றமாக பணியாற்றியது | மகாதேசாதிபதி கோமறைக் கழகத்தின் ஆலோசனையின் பெயரில் நியமிக்கப்பட்டார். (………….) |
| 12. முதலாம் குடியரசு யாப்பின் கீழ் அரசியலமைப்பு நீதி மன்றம் யாப்பின் காவல் நாயாக பணியாற்றியது. | ஆரசியல் யாப்பு நீதிமன்றம் தேசிய அரசுப் பேரவையால் ஆக்கப்படும் சட்டங்களை புனராய்வு செய்வதற்கு அதிகாரம் பெற்றிருந்தது. (…….) |
| 13. சோல்பரி யாப்பின் 29 ஆம் சரத்து சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக கொண்டுவரப்பட்டது. | 29 ஆம் சரத்து சிறுபான்மையினரின் உரிமைகளை மட்டுமன்றி அவர்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாத்தது. ( ..… ) |
| 14. 1972 தேசிய அரசுப்பேரவை அரச அதிகாரத்தின் மீயுயர் கருவியாக செயற்பட்டது. | தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை. (…….) |
| 15. செனற்சபை சோல்பரி யாப்பில் சிறுபான்மைக் காப்பீடாக கருதப்படவில்லை. | செனற் சபை 30 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது இதில் 15 உறுப்பினர்கள் மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டர்கள். ( ……. ) |

P.T.M. Ameen

## பகுதி B

01. வெஸ்மின்ஸ்டர் அரச மாதிரியின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக

I.........................................................................................................

.........................................................................................................

II.........................................................................................................

.........................................................................................................

02. சோல்பரி அரசியல் அமைப்பில் பிரித்தானிய அரசியலமைப்பிலிருந்து வேறுபடும் விடயங்களில் இரண்டைக் குறிப்பிடுக.

I.........................................................................................................

II.........................................................................................................

03. 1972 அரசியல் அமைப்பின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

I.........................................................................................................

II.........................................................................................................

04. சோல்பதி அரசியல் அமைப்பின் கீழ் இருந்த சிறுபான்மைக் காப்பீகள் 2 ஐக் குறிப்பிடுக.

I.........................................................................................................

II.........................................................................................................

05. 1972 முதலாம் குடியரசு யாப்பின் கீழ் இருந்த நாம நிறைவேற்றாளர் பதவியின் பெயர் யாது? அவரின் பதவிக் காலம் யாது?

I.........................................................................................................

II.........................................................................................................

06. i. 1947 சோல்பரி அரசியல் அமைப்பில் தாபிக்கப்பட்ட அரசாங்கத்தின் வகை யாது?

ii.சோல்பரி யாப்பின் கீழ் செனற்சபைக்கு ஒதுக்கப்பட வேண்டிய அமைச்சுக்களின் எண்ணிக்கை யாது?

I.........................................................................................................

II.........................................................................................................

07. நாம நிறைவேற்றாளர் நிலவிய சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையின் இரு அரசியல் யாப்புக்களைப் பெயரிடுக.

i.........................................................................................................

II.........................................................................................................

08. i. 1948 அரசியல் யாப்பின் கீழ் மகா இராணியினரின் இலங்கைப் பிரதிநிதியின் உத்தியோகப் பெயர் யாது?

ii. 1948 மகா இராணியினரின் இலங்கைப் பிரதிநிதியை நியமித்த முறை யாது?

I.........................................................................................................

II.........................................................................................................

09. அரசாங்க சேவையை நிர்வகிப்பதற்காக 1972 அரசியல் அமைப்பில் நியமிக்கப்பட்ட இரு சபைகளைக் குறிப்பிடுக.

I.........................................................................................................

II.........................................................................................................

10. சோல்பரி அரசியல் அமைப்பின் சட்டத்துறையின் இரு சபைகளையும் குறிப்பிடுக

I.........................................................................................................

II.........................................................................................................

P.T.M. Ameen

## பகுதி II

01. பின்வரும் விடயங்களில் எவையேனும் இரண்டை ஆராய்க

1. சோல்பரி யாப்பின் கீழ் காணப்பட்ட சிறுபான்மைக் காப்பீடுகள்
2. 1972 யாப்பின் கீழ் காணப்பட்ட சட்டத்துறையின் அதிகாரங்கள், கடமைகள்
3. 1947 சோல்பரி யாப்பபின் கீழும் 1972 யாப்பின் கீழும் இருந்த நாம நிறைவேற்றாளர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்

( 2X15 =30 புள்ளிகள்)

02. பின்வரும் விடயங்களில் எவையேனும் இரண்டை விளக்குக

1. 1972 முதலாம் குடியரசு யாப்பில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய விடயங்கள்.
2. 1947 சோல்பரி அரசியலமைப்பில் சட்டத்துறையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்
3. பின்வரும் விடயங்களில் ஏதாவது ஒன்றை விளக்குக
    1. அரசியலமைப்பு நீதிமன்றம்
    2. அடிப்படை உரிமைகள்
    3. செனற்சபை

( 2X10 =20 புள்ளிகள்)

PTM. Ameen

# விடைகள்

| வினா எண் | விடை | வினா எண் | விடை | வினா எண் | விடை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 6 | 5 | 11 | 4 |
| 2 | 3 | 7 | 4 | 12 | 3 |
| 3 | 3 | 8 | 5 | 13 | 1 |
| 4 | 4 | 9 | 2 | 14 | 1 |
| 5 | 4 | 10 | 3 | 15 | 3 |

01.

- ✓ அரசியலமைப்பு கட்டமைப்பினுள் முக்கிய இடம் பாராளுமன்றுக்கு கிடைத்தல்.
- ✓ பாராளுமன்றுக்கு பொறுப்புக்கூறும் அமைச்சரவை ஒன்று காணப்படல்.
- ✓ பாராளுமன்றம் சட்டரீதியாக உயர்நிலையினை அடைதல்.
- ✓ அரசாங்கமானது பாராளுமன்றத்தினால் நிருவகிக்கப்படல்.
- ✓ பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களால் அரசாங்கம் அமைக்கப்படல். □ அரசாஙக்ம ' பாராளுமனறுக்குப் பொறுபப்ககூறல ' (பாராளுமனற்மானது அமைசச்ரக்ளை தனிதத்னியாகவோ அல்லது கூட்டாகவோ அகற்ற முடியும்)
- ✓ பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கு உண்மையாக சவால் விடுக்க முடியாத வகையில் நீதிமன்றத்தின் வகிபங்கு வரையறை செய்யப்பட்டுள்ளமை.
- ✓ தனி அங்கத்தவர் தேர்தல் (எளிய பெரும்பான்மை) தொகுதி முறையினை அடிப்படையாகக் கொண்ட இரு கட்சி முறை.

02.

- ✓ சோல்பரி அரசியலமைப்பு எழுதப்பட்ட அரசியலமைப்பாக இருந்தமை.
- ✓ ஒப்பீட்டு ரீதியில் நெகிழா அரசியலமைப்பாக இருந்தமை.
- ✓ அரசியலமைப்பு விவரண அதிகாரம் வரையறுக்கப்பட்ட மற்றும் எழுதப்படாத வகையில் நீதிமன்றுக்கு உரித்தாக்கப்பட்டிருந்தமை

03.

- ✓ மக்கள் இறைமை
- ✓ அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும்
- ✓ அரச கொள்கை தத்துவம்
- ✓ தேசிய அரசுப் பேரவை
- ✓ அரசியலமைப்ப நீதிமன்றம்
- ✓ குடியரசு ஜனாதிபதி
- ✓ அமைச்சரவை
- ✓ மொழியும் மதமும்
- ✓ பொதுச்சேவை
- ✓ நீதிச்சேவை

P.T.M. Ameen

04.

- ✓ அரசியல் அமைப்பு 29 ஆம் பிரிவு
- ✓ செனற்சபை
- ✓ நியமன உறுப்பினர்கள்
- ✓ பல அங்கத்தவர் தேர்தல் தொகுதி
- ✓ கோமறைக் கழகம்
- ✓ அரசியலமைப்புத் திருத்தம் 2/3 பெரும்பான்மை
- ✓ பொதுச்சேவை, நீதிச்சேவை ஆணைக்குழுக்கள்

05. I ஜனாதிபதி ii. நான்கு வருடங்கள்

06. I மந்திரி சபை அரசாங்க முறை.∴ அமைச்சரவை அரசாங்கம் ii. இரண்டு

07. i. 1947 சோல்பரி அரசியல் அமைப்பு ii. 1972 முதலாம் குடியரசு அரசயில் யாப்பு

08. i. மகாதேசாதிபதி ii. பிரதமரின் சிபாரிசில் பிரித்தானிய மகா இராணியாரால் நியமிக்கப்பட்டார்.

09. அரசாங்க சேவை ஆலோசனை சபை, • அரசாங்க சேவை ஒழுக்காற்று சபை

10. மக்கள் பிரதிநிதிகள் சபை, செனட்சபை

PTM. Ameen